සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE

මගේ අංකය
எனது இல
My No DSD/HO/MF/05/02/01

ඔබේ අංකය
உமது இல: ........................................
Your No

දිනය
திகதி: 2017.06.09
Date

**மொழிபெயர்ப்பு**

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சுற்றுநிருபம் 2017/07**

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள்,
வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்க கட்டிட நிர்மாணம், அபிவிருத்தி மற்றும் நவீன மயப்படுத்தலுக்காக வங்கி கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியத்தினை உருவாக்குதலும் மற்றும் நிதியம் சேகரித்தலும்.**

**01. அறிமுகம்:-**

சமுர்த்தி வங்கிகள் குறுநிதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு தற்போது 20 வருடங்களை தாண்டியுள்ளது. இக்காலத்திற்குள் சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் கட்டிட நிர்மாணம் மற்றும் அதனை விரிவுபடுத்தல், நவீனமயப்படுத்தலுக்காக குறுநிதிப் பிரிவினதும் மற்றும் வங்கிகளினதும் நிதியங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இன் நிதியத்திலுள்ள நிதி தொடர்ந்தும் கட்டிட நிர்மாணம் மற்றும் விரிவுப்படுத்தல், நவீன மயப்படுத்தலுக்கு பாவிப்பதற்கு வரையறுக்கப்பட்டதாக காணப்படுகின்றது. எனவே முகாமைத்துவ சபைத் தீர்மான இலக்கம் 2016/10/06 மற்றும் 216/12/07 என்பவற்றுக்கு அமைய சகல சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களும் **“வங்கிக்கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியம்”** ஒன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வங்கிக் கட்டிட அபிவிருத்தி நிதியத்தினை உருவாக்குதல் மற்றும் நிதியத்தை பயன்படுத்தலுக்கு தேவையான ஆலோசனைகள் இத்தால் வழங்கப்படுகின்றது.

**02. நிதியத்தை சேகரித்தல்:-**

2.1 சமுர்த்தி வங்கிகளினால் வருடாந்த ஒதுக்கப்படும் நிருவாகச் செலவுக்கான (5%) நிதியம்.

2.2 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கங்களினால் வருடாந்தம் செலவு செய்யப்படும் ரூபா 12,000/= கட்டிட வாடகை நிதி.

**03. நிதியத்தின் உருவாக்கம்:**

3.1 2017ஆம் ஆண்டிலிருந்து வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் நிருவாகச் செலவு 5% நிதியினை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் குறுநிதிப்பிரிவுக்கு அனுப்புவதை

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail- dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (මානව සම්පත්) / பணிப்பாளர் ( மனிதவளம்) / Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
Hot Line : 0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය / அலுவலகம் / Office
011-2887280
Hot Line: 011- 2887722

கைவிட்டு அதனை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் தேக்கிவைத்தல் வேண்டும். அதே போல் கடந்த காலங்களில் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ள இந்நிதி இதுவரை குறுநிதிப்பிரிவுக்கு அனுப்பிவைக்கப்படாதிருப்பின் அதனையும் வங்கிக் கட்டிட அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்படுகின்றது.

3.2 2017ஆம் ஆண்டில் இருந்து வருடாந்த கட்டிட வாடகைச் செலவிற்கு ஒதுக்கிய ரூபா 12,000/= தொகையினை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்புவதை கைவிட்டு அதனை வங்கிக் கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியக் கணக்கில் வரவு வைக்கவும்.

**04. கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளல்:**

4.1 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி/ வங்கிச் சங்கங்களில் பின்வருமாறு பொதுப்பேரேட்டுக் கணக்குகளை பொறுப்புப் பகுதியில் ஆரம்பித்து செயற்படுத்திச் செல்லவும்.

வங்கிக்கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு கணக்கு - குறியீட்டு இலக்கம் 4053 (வங்கிகளில்)
வங்கிச் சங்க கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியக் கணக்கு - குறிப்பீட்டு இலக்கம் 9311 (வங்கிச் சங்கங்களில்)

4.2 2017ஆம் ஆண்டிலிருந்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் (பகிரக்கூடிய இலாபம் உழைக்கும் சந்தர்ப்பங்களில்) நிருவாக செலவாக இலாபப்பகிர்வில் 5%தை இதன் பின்னர் வங்கிக் கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நியத்துக்கு ஒதுக்கி வைக்கவும் அதற்காக கீழ் வரும் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பற்று- வருடத்துக்கான இலாப நட்டக்கணக்கு
வரவு- வங்கிக்கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதிய கணக்கு

4.3 இதன் பின்னர் (2017ஆம் ஆண்டிலிருந்து) வருடாந்த கட்டிட வாடகைச் செலவு ரூபா 12,000/=திற்கு சமுர்த்தி வங்கிகளில் கீழ் வருமாறு கணக்குப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். அதே போல் பிரதான காரியாலத்திற்கு அப்பணத்தை அனுப்ப வேண்டாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பற்று- செலவுக் கணக்கு - கட்டிட வாடகை.
வரவு- வங்கிக்கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியக் கணக்கு.

4.4 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கங்கள் 2017ஆம் ஆண்டிலிருந்து கட்டிட வாடகையினை பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைக்காமல் அத்தொகையினை நிதியத்தினை கட்டியெழுப்புவதற்காக கீழ்வரும் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பற்று- செலவுக் கணக்கு கட்டிட வாடகை.
வரவு- வங்கிச் சங்க கட்டிட அபிவிருத்தி நிதியக் கணக்கு.

**05. கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியத்தை பாவித்தல்.**

5.1 புதிய கட்டிட நிர்மாணம் செய்தல் அல்லது அபிவிருத்தி/ விஸ்த்தரிப்பு செய்யும் சந்தர்ப்பங்களில் அதற்கான திட்டயோசனை மற்றும் செலவு மதிப்பீடுகள் என்பவற்றை தயார்

செய்து பிரதேச செயலாளர், மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரின் சிபாரிசுடன் பணிப்பாளர் (குறுநிதி)க்கு அனுப்பி வைத்து அனுமதியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.2 அத்தோடு பணிப்பாளர் (குறுநிதி)யிடம் இருந்து அனுமதி கிடைத்த பின்னர் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய முதலில் உரிய பிரிவினர்களுடன் ஒப்பந்தங்களை செய்து கொள்ள வேண்டும்.

5.3 முற்பணத்தொகையினை அல்லது பகுதி அளவான/ முழுமையான தொகையினை வழங்கும் போது கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியத்தின் நிதியினை பாவித்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் அத்துடன் அதன் மெய்ப்பெறுமதியினை ஆவணங்களில் கீழ் வருமாறு பதிவு செய்யவும்.

5.3.1 கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியத்திலிருந்து படிப்படியாக அல்லது ஒரே தடவையில் (கொடுப்பனவு செய்யும் முறைக்கமைய) நிதியத்தினை பெற்றுக்கொள்ளவும்.

5.3.2 வங்கி அல்லது வங்கிச் சங்க கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியத்தின் நிதியினை செலவு செய்யும் போது CR புத்தகம் ஒன்றில் பின்வரும் தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு ஒன்றினை செயற்படுத்திக் கொள்ளவும்.

- திகதி
- செலவுக்கான காரணம்
- செலவு செய்த தொகை
- நிதியத்தின் ஒன்றிணைந்த மீதி (ரூபா)
- அதிகாரி ஒப்பம்

<u>**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் கணக்குப்பதிவுகள்.**</u>

I. வங்கிக் கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியக் கணக்கு )- பற்று
(குறியீட்டு இல 4053)

II. வங்கிக் கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியத்திலிருந்து கட்டிட நிர்மாணம்/ அபிவிருத்திக்காக பெற்றுக்கொண்ட நிதியக் கணக்கு - வரவு
(குறியீட்டு இல 4054)

III. சமுர்த்தி வங்கிக்காணி, கட்டிடம் மற்றும் பகுதி நிர்மாணப்புகளின் முடிவுப் பெறுமதிகளுக்கான காசு கொடுப்பனவுக் கணக்கு - பற்று
(குறியீட்டு இல 3315)
நடைமுறை/ அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்புக் கணக்கு - வரவு

**சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் தொடர்பான கணக்குப்பதிவு.**

I. வங்கிச் சங்க கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியக் கணக்கு - பற்று
(குறியீட்டு இலக்கம் 9311)

II. வங்கிச் சங்கக் கட்டிட நிர்மாண அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியத்திலிருந்து கட்டிட நிர்மாணம்/ அபவிருத்திக்காக பெற்றுக் கொண்ட நிதியக் கணக்கு - வரவு

(குறியீட்டு இல 9422)

IV. சமுர்த்தி வங்கிக் காணி, கட்டிடம் மற்றும் பகுதி நிர்மாணப்புகளின் முடிவுப் பெறுமதிகளுக்கான காசு கொடுப்பனவுக் கணக்கு - பற்று
(குறியீட்டு இல 7401)
நடைமுறை/ அங்கத்தவர் அல்லாதோர் சேமிப்புக் கணக்கு

5.4 கட்டிட நிர்மாணம்/ அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் இறுதிப் பெறுமானத்தினையே கணக்குகளில் பதியவேண்டியதுடன் வருடாந்தம் பெறுமானத்தேய்வு ஒதுக்கங்களை வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் ஒதுக்கம் செய்தல் வேண்டும்.

5.5 வங்கி/ வங்கிச் சங்க கட்டிடம் மற்றம் சுற்றாடலினுள் சிறிய திருத்தப் பணிகளுக்கு கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியினை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாவிக்க முடியாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் வங்கி நிதியத்திலிருந்து நிதியினைப் பயன்படுத்தி கொள்வதற்கு அனுமதியினை பெற்றுக் கொள்ள முடியும்.

5.6 வரி செலுத்தல் அல்லது வாடகை அடிப்படையில் வங்கிகளை நடாத்திச் செல்லும் சந்தர்ப்பங்களில் இலாபத்தில் பகிரப்படும் நிதியிணை (5%) வங்கிக் கட்டிட அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நிதியத்தில் வரவு வைத்தல் வேண்டும். பொதுவான வருடாந்த கட்டிட வாடகை ரூபா 12,000/= யினை ஒதுக்க வேண்டியதில்லை.

நீல் பண்டார ஹப்புகின்ன,
பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:-

1. செயலாளர்,
   சமுக வலுவூட்டல் நலனோம்புகை மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு - தகவலுக்காக,
2. சகல மாவட்ட செயலாளர்களுக்கும் - தகவலுக்காக,
3. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காகவும், உ.ந பொருட்டு,
4. பிரதம உள்ளக கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - தகவலுக்காகவும், உ.ந பொருட்டு,

Translated By :- I Aliyar